# திமோர் லெஸ்டேயில் இந்திய தூதரகத்தை நிறுவுவதற்கான முடிவை இந்தியா அறிவிக்கிறது

செப்டம்பர் 07, 2023

செப்டம்பர் 7, 2023 அன்று ஜகார்த்தாவில் நடைபெற்ற தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு-இந்தியா உச்சிமாநாட்டில், திமோர்-லெஸ்டெயின் டிலியில் இந்திய தூதரகத்தை நிறுவுவதற்கான முடிவை பிரதமர் அறிவித்தார். இந்த முடிவு தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்புக்கு இந்தியா கொடுக்கும் முக்கியத்துவத்தையும், திமோர் லெஸ்டே உடனான அதன் உறவுகளையும் பிரதிபலிக்கிறது.

இந்த முடிவை திமோர் லெஸ்டே மற்றும் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பு உறுப்பினர்கள் அன்புடன் வரவேற்றனர்.

திமோர் லெஸ்டே 2022 இல் தென்கிழக்காசிய நாடுகளின் கூட்டமைப்பில் முழு உறுப்பினராக ஆவதற்கு முன்பு, ஒரு பார்வையாளராக இருந்தது.

**ஜகார்த்தா**
**செப்டம்பர் 07, 2023**